மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் வெளிநடப்புச் செய்வதாக இருந்தால் செய்யுங்கள். தேவையில்லாமல் பிரச்சினையைக் கிளப்பாதீர்கள். முதலமைச்சர் அவர்கள் வரம்பு மீறிப் பேசவில்லை என்று நான் தீர்ப்புக் கூறிவிட்டேன். நீங்கள் வெளியேறுவதானால் வெளியேறலாம்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தீர்மானம் இங்கே நிறைவேற்றுவதற்கு முதலமைச்சர் அவர்கள் முன்வராததை ஆட்சேபித்து, நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம். அவர்கள் பேசும்போது, லல்லு பிரசாத்தை நாங்கள் ஆதரித்தது சம்பந்தமாகப் பேசினார்கள். பாரதிய ஜனதா கட்சி, பீகாரில் வெற்றிபெற்று வரக்கூடாது என்பதற்காக நாங்கள் அவரை ஆதரித்தோம். நாங்கள் ஆதரித்ததன் காரணமாக பி.ஜே.பி. கட்சி அங்கே வரவில்லை.

முற்பகல் 11-55

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, உண்மையை மறைக்கக்கூடாது. அந்த லல்லு பிரசாத், தேவகவுடா அமைச்சரவையிலே இடம் பெறக்கூடாது, அதை ஆதரிக்கவே கூடாது என்று சொன்னவர் சுர்ஜித்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: முதல்வர் அவர்கள், நாங்கள் லல்லு பிரசாத் அவர்களை ஆதரித்தது சம்பந்தமாகச் சொன்னார்கள். இந்தத் தேர்தலிலே நாங்கள் அவர் மேலே ஊழல் குற்றச்சாட்டு இருக்கிறது என்ற காரணத்தால், அவருடன் இருப்பது சரியல்ல என்று சொன்னோம். அது உண்மைதான், சரிதான். ஆனால் பி.ஜே.பி. ஆட்சிக்கு வரக் கூடாது என்பதற்காக அவரை ஆதரித்தோம்.

[இந்தியக் கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.]

4. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஆ) அவையின் நேரத்தை நீட்டித்தல்

திரு. ஜி.கே. மணி: ஒரேயொரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அவையினுடைய நேரம் பல்வேறு கோணங்களிலே சென்று விட்டது. இன்று பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், ஆதிதிராவிடர் நலன் பற்றிய முக்கியமான கோரிக்கை. அனைத்துத் தரப்பு மக்களுடைய வாழ்க்கைப்

பிரச்சினை உரிமைப் பிரச்சினை என்ற காரணத்தாலேயும், நேர அவகாசம் குறைவாக இருக்கிற காரணத்தாலேயும், இரண்டு அமைச்சர்கள் பதிலுரை கூறவிருக்கின்ற காரணத்தாலேயும் அவையின் நேரத்தை நீட்டிப்பதற்கு ஆவன செய்ய வேண்டி முதலில் நான் கேட்டு, அமைகிறேன்.

2. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஆ) மாண்புமிகு முதல்வர் உறுப்பினர்களுக்கு அளிக்கும் விருந்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஓர் அறிவிப்பு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று இரவு 7-30 மணிக்கு தாஜ் கோரமண்டல் உணவகத்தில் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கு விருந்து அளிக்க உள்ளார்கள். அதற்கான அழைப்பிதழ்கள் உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் விருந்தில் கலந்துகொள்ள, இன்று மாலை சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலிருந்து தாஜ் கோரமண்டல் உணவகத்திற்குச் செல்வதற்கும், பின் திரும்புவதற்கும் ஏதுவாக தனிப் பேருந்துகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) உறுப்பினர்களுக்கு மதிய உணவு ஏற்பாடு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பாக பேரவை மண்டபத்தை ஒட்டியுள்ள பிளாசாவில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இன்று நண்பகல், மதிய உணவு வழங்க மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்துள்ளார்கள். அதற்கு என்னுடைய அனுமதியைக் கோரி இருக்கிறார்கள். அனுமதி வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். குழுவின் தலைவர் சார்பாக. திருமதி ஆர். சரஸ்வதி.

திருமதி ஆர். சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுக் கணக்குக் குழுவின் 258 முதல் 267 வரையிலான அறிக்கைகளை குழுத் தலைவரின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.